In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

Elec.O.P.No.36/2022 | Deposition of Witness: CW3
Name: Santhoshkumar | Calling:
Father Name: | Religion:
Village: | Caste:
Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 11.09.2024.

முதல் விசாரணை :

நான் தற்சமயம் பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றுகிறேன். எங்கள் அலுவலக மோட்டர் வாகன ஆய்வாளருக்கு இவ்வழக்கில் அழைப்பாணை வந்திருந்தது. அவர் சாட்சியம் அறிப்பதற்காக எனக்கு அங்கீகாரக் கடிதம் அளித்துள்ளார். அந்த அனுமதி கடிதம் நீமசாஆ.8 ஆக குறியிடப்படுகிறது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டுவர இயலவில்லை. ஏன் எனில் ஓராண்டிற்கு மேல் உள்ள ஆவணங்களை நாங்கள் அழித்துவிடுவோம். சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி என்பவரின் ஓட்டுநர் உரிம எக்ஸ்ட்ராக்ட் நகலை கொண்டு வந்துள்ளேன். அது நீமசாஆ.9. ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கு 10ம் வகுப்பு பள்ளிச்சான்றிதழோ, மதிப்பெண் பட்டியலை பார்த்து உரிமம் வழங்குவோம் என்றால் சரிதான்.

நீதிமன்றக் கேள்வி - படிக்காத நபர்களுக்கு எவ்வாறு ஓட்டுநர் உரிமம் வழங்குவீர்கள்?

பதில்- ஓட்டர் ஐடி, ஆதார் கார்டு, குடும்ப அட்டை ஆகியவற்றை சரிபார்த்து உரிமம் வழங்குவோம்.

முதல் விசாரணை தொடர்ச்சி -

மேற்படி வேலுச்சாமிக்கு 10ம் வகுப்பு பள்ளி ஆவணங்களை பார்த்துதான் ஓட்டுநர் உரிமம் கொடுத்தோம் என்றால் அதுசம்மந்தப்பட்ட ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்பதால் அதுபற்றி சொல்ல இயலவில்லை. 2014ம் ஆண்டு ஆதார் கார்டு நடைமுறையில் இல்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை - வழக்குரைஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.09.11 17:46:06 +0530

Principal District Judge,
Dindigul.